# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2009, செத்தெம்பர் மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 2.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்**

[2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 23/2008

***1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2.** 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

> "(ii) தனியார் துறையிலிருந்து ஆணைக்குழுவின் பல்லின ஒழுக்காற்று முறையான பண்பைப் பிரதிபலிப்பதற்காக சட்டம், நிதி, வங்கித் தொழில் மற்றும் தொழில் துறையில் உயர்தொழில் நிபுணத்துவத்தையும் பரந்த அனுபவத்தையும் மற்றும் எண்பிக்கப்பட்ட தகுதியையும் கொண்டுள்ள வேறு ஆறு ஆட்கள்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது அதன் (இ) என்னும் பந்தியினை உடனடுத்துப்பின்னர் பின்வரும் பந்தியினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(இஇ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனிகளுக்கு காலத்துக்குக் காலம் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட பணிப்புகளை வழங்குதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவானது "பிணையங்கள்" என்னும் சொல்லின் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"பிணையங்கள்" என்பது, எந்தச் சொத்துக்கள்மீது தங்கியிருக் கப்படுகின்றதோ அந்தச் சொத்துக்களை ஆதாரமாகக் கொண்ட எத்தன்மையதுமான கூட்டிணைக்கப்பட்ட தாயினுஞ்சரி அல்லது கூட்டிணைக்கப்படாததாயினுஞ் சரி ஏதேனும் அரசாங்க அல்லது ஏதேனும் குழுமத்தால் வழங்கப்பட்ட அல்லது வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட வருங்காலங்களும் விருப்புத் தெரிவுகளும் உட்பட அல்லது அதன்கண்ணுள்ள அல்லது அது தொடர்பி லான எவையேனும் உரிமைகள், விருப்புத் தெரிவுகள் அல்லது அக்கறைகள் உட்பட (கூறுகளாக விவரிக் கப்பட்டனவாயினுஞ்சரி அல்லது வேறு வகையின வாயினுஞ்சரி) தொகுதிக் கடன்கள், பங்குத் தொகுதிகள், பங்குகள், நிதிகள், முறிகள், பெறுதிகள் அல்லது பிணையங்கள் எனப் பொதுவாக அறியப்படும் வேறு எவையேனும் சாதனங்கள் எனப் பொருள்படும், ஆனால் வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட நாணய மாற்றுண்டியல்களை அல்லது வாக்குறுதிப்பத்திரங் களை அல்லது வைப்புச் சான்றிதழ்களை உள்ளடக் காது.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்